முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1399

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.07.2023**, சனிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றும் தர்மத்தை
வாரி வழங்கி வையகத்தை காக்கின்ற
2. காக்கின்ற ஆறுமுக அரங்கனே
கருணைகொண்டு உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஆக்கமுடன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 13 ம் நாள், 29.07.2023, சனிக்கிழமை)
அருளுவேன் அரங்கன் உன் சக்தி பெருக
3. சக்திமிகு தொண்டர்படை தனை
சரணாகதியாக பூவுலகில் கொண்டதொரு
சக்திநிறைந்த ஆறுமுக அரங்கனே
சற்குருவாய் உன் வேதங்கள் அனைத்தும்
4. அனைத்தும் இந்த கலியுகத்தில்
அற்புதமாக மாற்றம் தரக்கூடும்
பக்தியோடு உன்வழி சரணாகதி கொண்டு
பணிவுடன் தொண்டாற்றுகின்ற தொண்டர்படை மூலம்
5. மூலமாக கலியுகத்தில் அற்புதத்தை
முழுமை ஞான மார்க்கமாக யான் நடத்துவேன்
நடத்தவே அரங்கன் உமக்கு நித்தம்நித்தம்
ஞானபலம் கூட்டி வருகின்றேன்
6. இடரின்றி அரங்கன் நீ சடுதி எழுந்து
இந்த உலகில் அற்புதம் நடத்த ஆசி உண்டு
ஆசிதந்தேன் அரங்கன் உந்தனுக்கு தடையற
ஆற்றல்தனை உணவாக ஔஷதமாக மாற்றமாகத் தந்து மகத்துவத்தை

7. மண்ணுலகில் உருவாக்குவேன் உன் அவதாரத்தின் வழி
அற்புதங்கள் நடக்கும் அரங்கன் கொள்கையாலே
ஆற்றல்பட அரங்கன் தொண்டர்படையால்
அனைத்தும் மாற்றமாக நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–